பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஐப்பசி 14 புதன்கிழமை (30-10-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 256

# கொழும்பு நீதிமன்றில் 6 சிப்பாய்களும் ஆஜர்

## உரும்பிராய் ரஜினி கொலை தொடர்பாக

கொழும்பு, ஒக்ரோபர். 30

உரும்பிராய் யுவதி வேலாயுதபிள்ளை ரஜினி கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்ட 6 இராணுவ சிப்பாய்களும் நேற்று முன்தினம் கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இந்த அறுவரையும் நவம்பர் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் முனதாஸ நாணயக்கார உத்தரவிட்டார்.

இந்த யுவதியை கடத்திச் சென்று கெடுத்துக் கொலை செய்ததாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இந்த அறுவரும் முதலில் யாழ்ப்பாணத்தில் யாழ். மாவட்ட நீதிபதி 'அருள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 4 ஆசிரியர்கள் நிலை கவலைக்கிடம்

பத்தரமுல்லையில் உண்ணாவிரதமிருக்கும் பயிலுநர் நால்வரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சாகும் வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள இந்த ஆசிரியர்களின் உண்ணாவிரதம் நேற்று 5 ஆவது நாளாகத் தொடர்ந்தது

இந்த போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நாட்டின் நாலா புறங்களில் இருந்தும் சுகவீன விடுமுறையில் ஆசிரியர்கள் பத்தரமுல்லைக்கு வந்தவண்ணமுள்ளனர் என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (இ-10)

### கிருஷாந்தி மற்றும் மூவர் படுகொலைச் சம்பவம்:

## இராணுவ நீதிமன்ற விசாரணையை கோருகின்றார் ஈ.பி.டி.பியின் எம். பி.!

ஊர்காவற்றுறை, ஒக்.30

நாவற்குழியில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி, மாணவன் பிரணவன் மற்றும் இருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் இராணுவத்தினர் நேரடியாகத் தொடர்புபட்டிருப்பதால் உடனடியாக இராணுவ நீதிமன்ற விசாரணை ஒன்றை நடத்தி, பகிரங்கத் தீர்ப்பு வழங்கி, அதனை உடனடியாகவே செயற்படுத்தவேண்டும்.

– இவ்வாறு கோரியிருக்கின்றார் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட எம். பியான ஆர் இராமேஸ்வரன் (மதன்).

மாணவி கிருஷாந்தி படுகொலை குறித்தும், அதனை அடுத்து எழுந்துள்ள மாணவர் பகிஷ்கரிப்புப் போராட்டம் குறித்தும் எமது செய்தியாளர் கேட்ட போதே அவர் இவ்வாறு கூறினார்.

மக்கள் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியாது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் பகிஷ்கரிப்பு நேற்று நகரப் பாடசாலைகளில் தீவிரம்

யாழ்ப்பாணம், ஒக் 30

யாழ். குடாநாட்டு மாணவர்களின் பாடசாலைப் பகிஷ்கரிப்பின் இரண்டாவது நாளான நேற்று —

நகரப் பாடசாலைகள் பலவற்றிலும் பகிஷ் கரிப்பு தீவிரமடைந்திருந்தது. மாணவர்களில் அதிக சதவீதமானோர் பகிஷ்கரிப்பில் கலந்து கொண்டு பாடசாலைகளுக்குச் சமுகமளிக்கவில்லை.

இதே வேளை பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் மிகப் பெரும்பாலான பாடசாலைகள் மாணவர் பகிஷ்கரிப்புக் காரணமாகச் செயலிழந்தன.

பாடசாலை மாணவி கிருஷாந்தி, பாடசாலை மாணவன் பிரணவன், பாடசாலை உப-அதிபர் திருமதி குமாரசாமி ஆகியோரின் படுகொலைகளுக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் பாடசாலை மாணவர்கள் திங்கட்கிழமை ஆரம்பித்த பகிஷ்கரிப்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்கு, வலிகாமம் தென் மேற்கு, வலிகாமம் தெற்கு ஆகிய பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்கு 2 ஆவது நாளான நேற்று மாணவர்கள் பகிஷ்கரிப்பில் முழு அளவில் ஈடுபட்டனர்.

யாழ். நகரப் பாடசாலைகளில் திங்கட் கிழமையுடன் ஒப்பிடும் போது நேற்று மாணவர்கள் மிக அதிக எண்ணிக்கையில் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இன்று நகரப்பகுதியில் பகிஷ்கரிப்பு முழு அளவில் ... படுவதாக மாணவர் வட்டாரங்கள் தெரிவித்தன.

## படுகொலைகளை கண்டித்து ஜனாதிபதிக்கு மகஜர்!

யாழ்ப்பாணம், ஒக் 30

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி குமாரசாமி, அவரின் சகோதரன், பரியோவான் கல்லூரி மாணவன் பிரணவன், இவர்களின் தாயார் திருமதி இராசம்மா குமாரசாமி ஆகியோரின் படுகொலைகளைக் கண்டித்து மேற்படி இருகல்லூரிகளினதும் அதிபர்கள், ஆசிரியர்கள் பெற்றோர்கள், கண்டன மகஜர் ஒன்றினை ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

யாழ்ப்பாண நகர இராணுவக் கொமாண்டர், வடபகுதி இராணுவ நடவடிக்கைப் பொறுப்பதிகாரி, இராணுவத் தளபதி ஆகியோருக்கு இதன் பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளன.

மேற்படி படுகொலைகளை வன்மையாகக் கண்டிப்பதுடன் மேலும் இப்படியான அசம்பாவிதங்கள் நடைபெறாமல் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படியும் அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## நரசிம்மராவ் இன்று நீதிமன்றில் ஆஜராவார்!

புதுடில்லி, ஒக் 30

சென். ஹிட்ஸ் போலி ஆவண வழக்கில் முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகிறார்.



இந்த வழக்குத் தொடர்பாக நரசிம்மராவ் கைதானதும் —

முன்பிணை அனுமதி அவருக்கு ஏற்கனவே நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததால் உடனடியாகவே அவர் 25 ஆயிரம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டதும் தெரிந்தவையே

புதுடில்லி வித்தியாபவனில் அமைக்கப்பட்டுள்ள விசேட நீதிமன்றத்தில் சென். ஹிட்ஸ் போலி ஆவண வழக்கு விசாரிக்கப்படுகிறது.

நரசிம்மராவ் இன்று ஆஜராவதை அடுத்து நீதிமன்றத்துக்குப் பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(இ-3)

## மொறக்கொட்டாஞ்சேனை முகாம் மீது தாக்குதல்

கொழும்பு, ஒக் 30

கடந்த ஞாயிறு இரவு மொறக் கொட்டாஞ்சேனை இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலை இராணுவத்தினர் முறியடித்தனர் என்றும்—

தாக்குதல் சம்பவத்தில் இரு இராணுவத்தினர் காயமடைந்தனர் என்றும்—

அவர்கள் இருவரும் ஹெலிக்கொப்டர் மூலம் பொலன்னறுவை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர் என்றும் – தெரிவிக்கப்பட்டது.

## யாழ். பஸ் நிலையத்தில் பஸ் ஒன்று எரிந்து நாசம்!

### நேற்றுப் பகல் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் தரித்து நின்ற பஸ் ஒன்று திடீரென தீப்பிடித்தது.

நேற்றுக் காலை 10 மணி அளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் யாழ்ப்பாணம்—புன்னாலைக்கட்டுவன் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்த புதிய ''வெஸ்கோ'' பஸ்ஸே தீப்பிடித்து எரிந்து நாசமாகியது.

இந்த பஸ் பழுதடைந்த நிலையில் திருத்த வேலையை மேற்கொள்ளும் பொருட்டு கடந்த மூன்று நாட்களாக பஸ் நிலையத்திலேயே தரித்து விடப்பட்டிருந்ததாகவும்—

அக்கம் பக்கம் இரண்டு பஸ்களுக்கு நடுவில் நிறுத்தப்பட்டிருந்த அந்த பஸ் திடீரென தீப்பற்றி எரிந்ததாகவும்—

முற்றிலும் கண்ணாடி இழைமத்தினால் தயாரிக்கப்பட்ட இந்த பஸ்ஸின் உட்பகுதி இருக்கைகள் யாவும் எரிந்து விட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

அந்நேரம் அங்கு நின்ற ஊழியர்களும் பொது மக்கள் சிலரும் தண்ணீர் அள்ளி ஊற்றித் தீயை அணைத்ததாக போக்குவரத்துச் சேவை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(இ-15)

## வவுனியா வருவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 30

வவுனியா வருவோர் மீதான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்ட பின்னர் கடந்த திங்கட்கிழமை வரை 10 ஆயிரம் பேர் வவுனியா வந்துள்ளனர்.

இவர்களில் 600 பேர் யாழ். செல்ல வவுனியா செயலகத்தில் தம்மைப் பதிவு செய்து கொண்டனர்.

திங்களன்று 200 பேர் ரயில் மூலம் திருகோணமலைக்கு அனுப்பப்பட்டனர். மேலும் 300 பேர் நேற்று அனுப்பப்பட்டனர் என்று வவுனியா அரச அதிபர் தெரிவித்தார்.

### தமிழர் இன்னலை வெளிப்படுத்த

## விழிப்புணர்வு வாரம் இன்று முதல் அனுஷ்டிப்பு

லண்டன், ஒக். 30

வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் இன்று தொடக்கம் நவம்பர் ஐந்தாம் திகதி வரை சர்வதேச விழிப்புணர்வு வாரமாக அனுஷ்டிக்க உள்ளனர்.

ஈழத் தமிழர்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்களையும், இன்னல்களையும் அவலங்களையும் சர்வதேச நாடுகளுக்கு எடுத்து விளக்கும் பிரசாரங்களை மேற்கொள்வதும் —

உலக நாடுகளில் வாழும் தமிழர்கள் மத்தியில் விழிப்புணர்வைத் தூண்டுவதும் — சர்வதேச விழிப்புணர்வு வாரத்தை அனுஷ்டிப்பதன்

(8 ஆம் பக்கம்பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொக்குவில் இந்துக் கல்லூரி

## ஆண்டு 6 அனுமதி - 1997

மேற்படி அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்கள் கல்லூரி அலுவலகத்தில் பெற்று விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி: **15-11-1996**

அதிபர்.

C/337-8



## கலந்துரையாடல்

அரச கணக்காளர் சேவை ஆட்சேர்ப்புப் பரீட்சார்த்திகளுக்கான கலந்துரையாடல் யா/ கந்தர் மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் 31-10-1996 வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு இடம்பெறும். பரீட்சார்த்திகள் யாவரும் கலந்து கொள்ளவும்.

எஸ். தேவருள்ராஜா,
எஸ். சிவராஜா
(பரீட்சார்த்திகள் சார்பில்)

(43402)



## கலைப்பீட மாணவர்களுக்கான

## அறிவித்தல்

பரீட்சைக்குத் தோற்றாத அனைத்து கலைப்பீட மாணவர்களும் தமது பெயர் விவரங்களை உடனடியாக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கலைப்பீட மாணவர் ஒன்றியம்
யாழ். பல்கலைக் கழகம்.

(43401)



## NATIONAL CERTIFICATE IN ENGLISH - 1996

★ விண்ணப்பிக்கும் முடிவு திகதி: **08 - 11 - 1996**
★ பரீட்சைத் திகதி: தை, 1997
★ துரித போதனை நடத்தப்படுகின்றது.

ஆசிரியர்: த. ந. பஞ்சாட்சரம்

★ ஆரம்பம்: **30-10-1996**
புதன் முற்பகல் **10-00** மணி
★ பரீட்சைக்குரிய விண்ணப்பப்படிவம் எம்மிடமுண்டு.

**NEW SCIENCE HALL**
KANNATHIDDI, JAFFNA.

(சி/3377)


## ஓராண்டு நினைவினில் ஓயாத துயரினில்



## திருமதி கதிர்காமு குணமணி

மலர்ந்தாய்: **10 - 02 - 40**
உதிர்ந்தாய்: **11 - 11 - 95**
திதி: **30 - 10 - 96**

குடிவிட்டு உறவின்றி
குழிதாண்டிச் செல்கையிலே
குடிதண்ணீர் எனக் கேட்க
குடைத் தண்ணீர் தந்தோமம்மா
மடிந்தாயே மட்டுவிலில்
மணி எங்கள் குணமம்மா
விடி (ய) வில்லை இருட்டுத்தான்
வழி இன்னும் இருட்டுத்தான்

கணவன், பிள்ளைகள்.
பேரப்பிள்ளைகள்.

ராஜகாரியார் வீதி,
மானிப்பாய்.

(8948)

# வரவுப் பதிவேட்டில் கையொப்பமிட அரச வைத்தியர் தொடர்ந்து எதிர்ப்பு

கொழும்பு, ஒக். 30

கடமைக்கு வரும்போது வரவுப்பதிவேட்டில் கையொப்பமிடவேண்டும் என்ற உத்தரவை தாங்கள் தொடர்ந்து எதிர்த்து வருவதாக அரசாங்க வைத்தியர்கள் சங்கம் அறிவித்துள்ளது

தங்களுக்கு வரவுப் பதிவேட்டில் கையொப்பமிடுவது முக்கியமில்லை எனவும்—

நோயாளிகளுக்கு வைத்தியம் செய்வதே முக்கியம் என்றும்— அரச வைத்தியர் சங்கத்தின் பதில் தலைவர் டாக்டர் ஆனந்த அமரசேகரா தெரிவித்துள்ளார்.

1-11-96 ஆம் திகதியிலிருந்து அரச வைத்தியர்கள் வரவுப்பதிவேட்டில் கையொப்பமிடவேண்டும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. கடமைநேரத்தில் அரச வைத்தியர்கள் தனிப்பட்ட விதத்தில் வைத்தியம் செய்கின்றனர் எனத் தெரிவிக்கும் சுகாதார அமைச்சு, இந்த ஊழலைத் தடுக்க வைத்தியர்கள் கட்டாயமாக வரவுப் பதிவேட்டில் கையொப்பமிட வேண்டும் எனத் தெரிவிக்கிறது.

அரச வைத்தியர்களுக்கும் சுகாதார அமைச்சுக்கும் இடையே தோன்றியுள்ள இந்தக் கௌரவப் பிரச்சினையானது நாட்டின் சுகாதார, வைத்திய சேவைகளில் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என அஞ்சப்படுகிறது.

[இ-10]

## காங்கேசனில் குமண

வடமராட்சி, ஒக். 30

ஒரு தொகுதி மாவுடன் குமண கப்பல் நேற்று காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்தது. (இ-173)

## முன்னணி காவலரண் மீது தாக்குதல்

கொழும்பு, ஒக் 30

வவுனியா, கொக்கிலியாய் முன்னணிப் பாதுகாப்பு அரணில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸார் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

ஒருமணிநேரம் இத்தாக்குதல் நடந்தது.

கடந்த 25ஆம் திகதி நடந்த இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தலைவர் ஒருவர் கொல்லப்பட்டார் என பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர். (இ-3)

## தாண்டிக்குளம் தமிழ்ப்பெண் கைது!

வவுனியா, ஒக். 30

வடபகுதிக்கு எடுத்துச் செல்லத் தடைவிதிக்கப்பட்டுள்ள மோட்டார்வாகன உதிரிப்பாகங்களைத் தாண்டிக்குளம் வழியாக எடுத்துச் செல்ல முற்பட்ட தமிழ்ப் பெண் ஒருவரை வவுனியாப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

சுப்பிரமணியம் மகேஸ்வரி என்றழைக்கப்படும் இவர் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவரா? அல்லது அந்த அமைப்புக்குப் பொருள்கள் வழங்கும் தரகரா? என்பது சம்பந்தமாக விசாரணைகள் நடைபெற்று வருவதாக வவுனியா சிரேஸ்ட பொலீஸ் அத்தியட்சகர் காமினி டி சில்வா தெரிவித்தார்.

(இ-10)

## காரைநகரில் துப்பாக்கி சூட்டுச் சம்பவம்

ஊர்காவற்றுறை, ஒக். 30

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு காரைநகர், கோவளம் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்த பெண்ணை ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியில் அனுமதித்த பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

இரவு நேரம் வீட்டுக்கு வெளியே நடமாடியதாகக் கூறப்படும் தனேஸ்வரி (வயது 48) என்ற குடும்பப் பெண்ணே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர் ஆவார்.

இரவு நடமாடியதால் சந்தேகத்தின் பேரில் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (உ)

## விலை மாற்றம்

நேற்றைய உதயன் இரண்டாம் பக்கத்தில் வெளியான 'விலை மாற்றம்' என்ற அறிவித்தல் வடமராட்சி கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினால் வெளியிடப் பட்டதாகும். சங்கத்தின் [illegible] தெரிவிக்கப்படுகிறது.


## யாழ்ப்பாண மாநகர சபை

### சனசமூக நிலையங்களுக்கான

## அறிவித்தல்

மேற்படி விடயமாக 06-09-1996 ஆம் திகதி உதயன் பத்திரிகை விளம்பரத்திற்கு கவனத்தை ஈர்ப்பதோடு யாழ். மாநகரசபைப் பிரதேச நிலையங்களுக்குரிய 1996 ஆம் ஆண்டுக்கான நன்கொடைகளை வழங்குவதற்கு வசதியாக எதிர்வரும் 10-11-1996 ஆம் திகதிக்கு முன்னர் குறித்த நிலையங்களின் நிர்வாகிகள் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன் குறித்த திகதியின் பின் விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதையும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
1996 10-29.

[சி/3374]


## மரண அறிவித்தல்கள்

### திருமதி தம்பு பொன்னம்மா

மீசாலை மேற்கு மாதா கோயிலடியைச் சேர்ந்த திருமதி தம்பு பொன்னம்மா 28-10-96 அன்று காலமானார்.

இவர் தம்புவின் அன்பு மனைவியும், பாறுப்பிள்ளையின் சகோதரியும். கமலேஸ்வரன், கமலேஸ்வரி, இராஜேஸ்வரன் (வன்னி), இராஜேஸ்வரி (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகேஸ்வரி (ஜேர்மன்), யோகேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் பெரிய தாயாரும், இராஜேஸ்வரி, தங்கராஜா, சாந்தரூபி, துரைசிங்கம், (ஹொலண்ட்), சுப்பிரமணியம் (ஜேர்மன்) ஆகியோரின் மாமியாரும், இரமேஸ்வரன் (ஜேர்மன்), கிறேஸ் பெல்சியா, கிறேஸ் டெல்சியா, கிறேஸ் ரெலன்சியா, கிறேஸ் பௌசியா, பகீரதி, கோகுலன், கோபிநாத், ஜெபசப்திகா, பாருக் (ஹொலண்ட்), யாதவன் (ஜேர்மன்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29-10-96 செவ்வாய்க்கிழமை (நேற்று) 12 மணியளவில் அல்லாரை பொற்புலவு மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. தம்பு
(கணவர்)

மாதாகோயிலடி,
மீசாலை மேற்கு,
மீசாலை.

[சி/33ஒ7]

### சின்னப்பொடி கொழுந்தன்

உடுப்பிட்டி நாவலடியை வசிப்பிடமாகக் கொண்ட சி. கொழுந்தன் 28-10-96 இல் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29-10-96 இல் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மகன்: கொ. துரைசிங்கம்,
மகன்: கொ. குணசிங்கம்.
(முதன்மை ஆசிரியர் (தொ. நு) கல்வித்திணைக்களம்) வலயம் II,
யாழ்ப்பாணம்.

"கிருஷ்ணமலரகம்"
நாவலடி,
உடுப்பிட்டி.

(43408)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம்

## அமெரிக்காவில் சூடு பிடிக்கிறது

நியூயோர்க், ஒக். 30

அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது.

தேர்தலுக்கு இன்னும் 8 நாள்களே இருக்கின்ற வேளையில் குடியரசுக் கட்சியின் வலுவான தளமான வேர்ஜீனியா மாநிலத்துக்கு தமது இறுதிக் கட்டப் பிரசார ''யுத்தத்தை'' நடத்த ஜனாதிபதி பில் கிளின்ரன் அங்கு போய்ச் சேர்ந்தார்.

கடந்த 30 ஆண்டுகளாக வேர்ஜீனியா மாநிலம் குடியரசுக் கட்சியைத் தான் ஆதரித்து வந்திருக்கிறது.

இறுதியாக எடுக்கப்பட்ட தேர்தல் கணிப்புகள் அதிபர் பில் கிளின்ரன் 20 சதவீத வாக்குகள் வித்தியாசத்தில் அமோகமாக வெற்றி பெறுவார் எனக் காட்டுகின்றது.

(இ-10)

## திருடிய சிறுவர்களின் விரல்கள் வெட்டப்பட்டன

தெஹ்ரான், ஒக். 30

ஈரானில் திரும்பத் திரும்ப திருட்டுத் தொழில் புரிந்து வந்த இரு சிறுவர்களின் பத்து விரங்களும் நீதிமன்ற உத்தரவின் பேரில் நேற்று முன்தினம் வெட்டப்பட்டன

இஸ்லாமிய ஷரியத் சட்டத்தில் ஏழைகள் மற்றும் நோயாளிகளிடமிருந்து திருடுபவர்களின் கைவிரல்கள் வெட்டப்படவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-10)

## யெல்ட்ஸினின் உடல் நிலை குறித்து கோர்பச்சேவ்

மொஸ்கோ, ஒக். 30

ரஷ்ய அதிபராகப் பணிபுரியும் உடல் நிலை இன்று அதிபர் யெல்ட்ஸினுக்கு இல்லை துடிப்பான தலைமைதான் நாட்டுக்கு இன்று தேவை. அதிபர் யெல்ட்ஸின் உடனடியாக இராஜினாமாச் செய்வது நாட்டைச் சீரழிவிலிருந்து காக்கும்.

முன்னாள் ரஷ்ய அதிபர் மிக்கேல் கோபர்ச்சேவ் நேற்று முன்தினம் பத்திரிகையாளர்களிடம் பேசும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(இ-10)

## குடியிருப்பு மாடிக் கட்டடம் விழுந்து மூவர் பலியாகினர்

### கெய்ரோ நகரில் சம்பவம்

கெய்ரோ. ஒக். 30

எகிப்திய தலைநகரான கெய்ரோவில் குடியிருப்பு மாடிக் கட்டடம் இடிந்து மூவர் பலியானார்கள். நூற்றுக்கும் அதிகமானோரைக் காணவில்லை. மீட்புப் பணிகள் முழு வீச்சில் நடைபெறுகின்றன.

கனரக இயந்திரங்கள் இடிபாடுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளன எனவும் மாடிக்கட்டடம் இடிந்ததற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும் இம்மாடிக் கட்டடத்தின் கீழ் மாடியில் இயங்கி வந்த வங்கியில் சில கட்டட விஸ்தரிப்பு வேலைகள் நடைபெற்றதாகவும் இதுவே கட்டடம் இடிந்ததற்கான காரணம் எனவும் உள்ளூர் மக்கள் தெரிவிக்கிறார்கள்.

தரம் குறைந்த சிமெந்தினால் இம்மாடி கட்டப்பட்டதே இடிந்து விழக் காரணம் என மற்றும் ஒரு சாரார் நம்புகிறார்கள்.

(இ-10)

## உலக அரங்கில்

### குற்றாலத்தில் நிலவாயு கண்டுபிடிப்பு

தமிழ்நாடு நாகபட்டணம் காயிதே மிலாத் மாவட்டத்திலுள்ள குற்றாலத்தில் வளமான நிலவாயுப் படிவு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மத்திய பெற்றோலிய இணை அமைச்சர் டி. ஆர். பாலு தெரிவித்தார்.

மற்றுமொரு நிலவாயுப்படிவு ஆந்திரா மாநிலத்தில் கிருஷ்ணா வடிநிலப் பிரதேசத்திலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு இடங்களிலுமுள்ள நிலவாயு வளம் தலா 20 இலட்சம் கன அடிக்கும் அதிகமானது என அமைச்சர் தெரிவித்தார்

(இ-10)

## உளவு பார்த்ததாகக் குற்றச்சாட்டு

## இந்திய, பாக். தூதரக அதிகாரிகள் வெளியேற்றம்

### ராஜீக நடவடிக்கைகள்

இந்தியாவும், பாகிஸ்தானும் தத்தமது நாடுகளில் உள்ள மற்றைய நாட்டின் தூதரகங்களைச் சேர்ந்த தூதரக அதிகாரிகளை உளவு பார்த்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் நாட்டை விட்டு வெளியேறும்படி உத்தரவிட்டிருக்கின்றன.

பாகிஸ்தான் தூதரகத்தைச் சேர்ந்த முக்தாஸ் கோஷா என்பவர் உளவு பார்த்த குற்றங்களுக்காக ஏழு நாள்களுக்குள் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும் என புதுடில்லி அரசினால் உத்தரவிடப்பட்டுள்ளது.

அதேசமயம் — இந்த நடவடிக்கைக்கு பழிவாங்கும் வகையில் இஸ்லாமாபாத்தில் உள்ள இந்திய தூதரக ஊழியரான அசோக்குமார் வாஷி நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

7 நாள்களுக்குள் பாகிஸ்தானில் இருந்து வெளியேற வேண்டும் என்று அவருக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

(உ-3)

## எல்லையில் முட்கம்பி வேலி அமைக்க பாகிஸ்தான் திட்டம்

இஸ்லாமாபாத் ஒக். 30

இந்திய — பாகிஸ்தான் எல்லையில் முட்கம்பி வேலி அமைக்க பாகிஸ்தான் முடிவு செய்துள்ளது.

அதிகரித்துவரும் சட்ட விரோதக் குடியேற்றத்தைத் தடுக்கவே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஏற்கனவே அமைக்கப்பட்ட பாதுகாப்பு ஒழுங்குகளுக்கு மேலதிகமாக முட்கம்பி வேலி அமைக்கப்படவுள்ளதாகவும் இதற்கான அனுமதியை

( 5 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் இருந்து யாழ். வர மாதக்கணக்கில் அலையும் மக்கள்

கொழும்பு பம்பலப்பிட்டியில் பனம் பொருள் கூட்டுத்தாபனம் இருக்கிறது. 'கற்பகம்' என்னும் பெயரில் உள்ள அதன் கட்டடத்தின் ஒரு பகுதியில் யாழ் அரசாங்க அதிபரின் கொழும்பு காரியாலயம் இயங்குகிறது.

'கற்பகம்' கட்டடத்தின் கீழே ஒரு அறிவித்தல் பலகை இருக்கிறது. தினமும் பல நூற்றுக்கணக்கானோர் அந்த அறிவிப்புப் பலகைக்கு முன் கூடுகின்றனர். பின்னர் ஏமாற்றத்தோடு திரும்புகின்றனர்.

யாழ். குடாநாட்டுக்கு செல்வதற்காக பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை எதிர்பார்த்து காத்துக்கிடப்பவர்கள்தான் அவர்கள்.

### 2 மாதம் காத்திருக்க வேண்டும்

கொழும்பிலிருந்து யாழ் குடாநாட்டுக்கு ஒருவர் செல்ல வேண்டுமானால் குறைந்தது இரண்டு மாதம் காத்திருக்க வேண்டும்.

முதலில் பொலீஸ் நிலையம் சென்று ஒரு விண்ணப்பப்படிவம் பெற்றுக் கொள்ள வேண்டும். அதனைப் பூர்த்தி செய்து பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்க வேண்டும்.

கொழும்பில் வசிப்பதற்கான வதிவிடத் துண்டு இருந்தால்தான் பொலீசில் விண்ணப்பப்படிவமே கொடுப்பார்கள். அப்படியிருந்தும் குறிப்பிட்ட விண்ணப்பம் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பப்பட்ட பின்னர் விண்ணப்பம் செய்தவர் தொடர்பாக இராணுவ உளவுப் பிரிவினரும் விசாரணை மேற்கொள்கிறார்கள்.

விசாரணைகள் முடிந்த பின்னரும் உடனடியாக அனுமதி கிடைத்து விடாது. அனுமதி கேட்டவருக்கும் நேரடியாகவோ, அவரது முகவரிக்கோ தகவல் சொல்லப்படுவதில்லை.

'கற்பகம்' முன்பாக உள்ள அறிவித்தல் பலகையில் அனுமதி வழங்கப்பட்டோரின் பெயர்களை ஒரு தாளில் எழுதி ஒட்டிவைப்பார்கள்.

அங்கு போய்த்தான் தமது பெயரும் இருக்கிறதா என்று கண்டறிய வேண்டும். எப்போது பெயர் வரும் என்று தெரியாது என்பதால் தினமும் 'கற்பகம்' நோக்கி அலைந்து திரிய வேண்டும்.

யாழ் செல்ல விண்ணப்பிக்கும் ஒருவருக்கு அவரது தினசரிக் கடமைகளில் ஒன்றாக 'கற்பகம்' முன்பு சென்று பெயர் தேடும் படலமும் சேர்ந்து கொள்கிறது.

இரண்டு மாதகாலமாக கற்பகத்துக்கும் வீட்டுக்குமாக அலைந்து கொண்டிருப்பவர்களும் இருக்கிறார்கள்.

> கொழும்பிலிருந்து வெளியாகும் 'தினமுரசு' வார இதழில் ''பயணங்கள் முடிவதில்லை'' என்ற தலைப்பில் வெளியான கட்டுரையில் இருந்து சில பகுதிகள் மறு பிரசுரம் செய்யப்படுகின்றன.

### கப்பலுக்கு காத்திருப்போர்

இதனைவிட திருமலையில் இருந்து கப்பலில் செல்வதற்காக திருமலையில் காத்திருப்பவர்களின் கதையும் சோகமானது.

திடீர் திடீர் என்று கப்பல் பயணிகளுக்கான பதிவுகள் நிறுத்தப்படும். கப்பல் புறப்படும் திகதிகளும் திடீர் என்று பின் தள்ளிப்போடப்படும்.

திருமலையில் இருந்து ஒருவர் கப்பலில் செல்லவேண்டுமானால் திருமலை பொலீஸாரின் 'கிளியரன்ஸ்' தேவை என்று முதலில் ஒரு விதி இருந்தது. பின்னர் ஈ.பி.டி.பி. தலையிட்டு பாதுகாப்பு அமைச்சுடன் பேசியதையடுத்து அந்த விதி மாற்றப்பட்டுள்ளது.

திருமலை பிரதேச செயலாளரிடம் பயணிகள் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். அவர் பயணிகளின் பட்டியலை கடற்படையினருக்கு அனுப்பி வைப்பார். அந்தப் பட்டியலில் உள்ள பெயர்களை ஆராய்ந்து கடற்படையினர் அனுமதி கொடுக்க வேண்டும்.

இதுவரை திருமலை பிரதேச செயலாளரால் கொடுக்கப்பட்ட பட்டியல்களில் ஒரு [illegible]

கொழும்பு மூலமான விமானப் பயணத்தோடு ஒப்பிடும் போது திருமலை மூலமான கப்பல் பயணத்தில் விசாரணைக் கெடுபிடிகள் குறைவாக உள்ளன.

பொலீஸ் நிலையத்துக்கு அலைச்சல். பின்னர் விசாரணைக்கு உட்படுதல். அதன் பின்னர் 'கற்பகம்' நோக்கிய அலைச்சல் போன்ற கட்டங்கள் கப்பல் போக்குவரத்து விடயத்தில் கடைப்பிடிக்கப்படுவதில்லை.

யாழ்ப்பாணம் நோக்கிய பயணவிடயத்தில் கொழும்பில் ஓர் அணுகுமுறையும், திருமலையில் மற்றொரு அணுகுமுறையும் கடைப்பிடிக்கப்படுகின்றன ஆனால் இரண்டு போக்குவரத்துக்களுமே பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவைதான்.

விமானப் பயணம் என்பதால் பாதுகாப்புத்தரப்பினர் உஷாராக இருக்கிறார்கள் என்று காரணம் கூறப்படுகிறது.

பயணிகள் முற்று முழுதான பரிசோதனையின் பின்னரே விமானத்தில் ஏற்றப்படுகின்றனர். எனவே பாதுகாப்பு தொடர்பான காரணங்களால் கொழும்பு கெடுபிடியை நியாயப்படுத்த இயலாது.

புலிகளும் பயணிகளோடு பயணிகளாக சென்றுவிடுவார்கள் என்று கூறப்படும் காரணமும் சொத்தையானது.

### புலிகளுக்கு பல பாதைகள்

யாழ். குடாநாட்டுக்கு சாதாரண மக்கள் செல்வதற்கு இரண்டே இரண்டு வழிகள் தான் இருக்கின்றன ஒன்று கொழும்பு இன்னொன்று திருமலை.

யாழ். குடாநாட்டுக்குள் புலிகள் செல்வதற்கு பல வழிகள் இருக்கின்றன.

வன்னியிலிருந்து ஒரு படகு மூலம் யாழ். குடாநாட்டுக்கு புலிகள் உடனடியாகச் சென்றுவிடலாம்; சென்று கொண்டும் இருக்கின்றனர்.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் தான் யாழ். செல்ல வேண்டும் என்ற அவசியம் புலிகளுக்கு கிடையாது.

யாழ். குடாநாட்டுக்கு புலிகள் செல்லும் பாதைகள் பல் இருக்கும் போது, பாதுகாப்பு அமைச்சு பொது மக்களின் பாதையில் நின்று மறித்துக் கொண்டிருக்கிறது.

யாழ். செல்வதற்காகக் கொழும்பில் உள்ள ஒரு புலி உறுப்பினர் விண்ணப்பம் போடுவதாக ஒரு வாதத்திற்காக வைத்துக்கொண்டாலும் அதனை எப்படிக் கண்டுபிடிக்கப் போகின்றார்கள்?

கொழும்பில் பதிவு மற்றும் தன்னை ஒரு சாதாரண நபராகக் காட்டிக்கொள்ளக் கூடிய ஏற்பாடுகளோடுதான் ஒரு புலி உறுப்பினர் தங்கி இருக்க முடியும். தகவல்கள் கிடைத்தால் மட்டுமே அவர் புலி உறுப்பினர் என்று தெரிய வரும். அப்படித் தகவல்

( 5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு முகாம் தாக்குதலில் 1,454 படையினர் உயிரிழந்தனர்!

முல்லைத்தீவு முகாம் தாக்கப்பட்டபோது அங்கு எத்தனை பேர் இருந்தனர்?

இது குறித்து பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை வெளியிட்ட தகவலின்படி —

★ இராணுவத்தினர் — 1,268 பேர்

★ கடற்படையினர் — 9பேர்

★ பொலீஸார் — 49 பேர்

★ சிவிலியன்கள் — 81 பேர்

ஆக மொத்தம் ஆயிரத்து 407 பேர் அங்கு இருந்திருக்கின்றார்கள்.

''இந்த யுத்தத்தில் 12 பேர் இறந்தது மட்டுமே ஊர்ஜிதப்படுத்தப்பட்டு அவர்கள் அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர். ஏனையோர் யுத்தத்தில் காணாமல் போனவர்கள் என்றே கருதப்படுவார்கள்'' — என அறிவித்திருக்கின்றார். ஜெனரல் ரத்வத்தை.

''முல்லைத்தீவு முகாமிலிருந்து புலிகளால் கைப்பற்றப்பட்டவை எனக் கூறப்படும் ஒரு தொகை படையினரின் சடலங்கள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரிடம் கையளிக்கப்பட்ட போதிலும் —

''மிகவும் உருக்குலைந்து கடும் சேதமுற்றிருந்த அந்தச் சடலங்கள் எமது வீரர்களுடையவை எனத் தனித் தனியாக அடையாளம் காணப்படாததால், அந்தப் படையினரும் யுத்தத்தில் காணாமல் போனவர்கள் என்றே கருதப்படுவர்'' — என்றும் ரத்வத்தை குறிப்பிட்டிருக்கின்றார்.

### 1407 பேர் இருந்தனர்

ஜெனரல் ரத்வத்தையின் கணக்குப்படி முகாம் தாக்குதலுக்கு இலக்கான சமயம் அங்கு 1407 பேர் இருந்தனர்.

''சண்டே ரைம்ஸ்'' செய்தியாளரின் தகவலின்படி அவர்களில் இரு அதிகாரி உட்பட 64 படையினர் தப்பி, பாதுகாப்பாக வந்து சேர்ந்து விட்டனர். எஞ்சிய 1343 பேரில் 12 பேர் மட்டுமே உயிரிழந்ததை அனுருத்த ஊர்ஜிதப்படுத்துகின்றார். மிச்சம் 1331 பேரும் முல்லைத்தீவு யுத்தத்தில் காணாமல் போயிருக்கின்றார்கள்.

இது தவிர, முல்லைத்தீவு முகாமில் இருந்த படையினரை மீட்கச் சென்ற அணியில் இடம் பெற்றிருந்த 23 சிப்பாய்கள், 37 விசேட அதிரடிப் படையினர், 34 கடற்படையினர் உயிரிழந்திருக்கின்றனர்.

இவர்களுடன் சேர்த்தால் முல்லைச் சமரில் உயிரிழந்த அல்லது காணாமல் போன படையினரின் எண்ணிக்கை 1437 ஆகும்.

ஆனால்இத்தொகை 1,445 என்று கூறுகின்றார் ''த சண்டே ஐலண்ட்'' இராணுவச் செய்தியாளர்.

எது எப்படியாயினும் ஸ்ரீலங்காவில் இனப்போரில் அரசுப் படைகளுக்கு பேரிழப்பை ஏற்படுத்திய சமர் முல்லைத்தீவு முகாம் மீது புலிகள் தொடுத்த யுத்தமே.

### கறுப்பு ஜூலை

இது தவிர அந்த ஜூலை மாதத்தில் நடந்த பிற தாக்குதல் சம்பவங்களில் (யாழ். ஸ்ரான்லி வீதி குண்டு வெடிப்புச் சம்பவம் உட்பட) 160 படையினர் உயிரிழந்திருக்கின்றார்கள்; 391 படையினர் காயமடைந்திருக்கின்றார்கள்.

அதாவது ஜூலை மாதம் நடைபெற்ற ஒரு மாத காலச் சமரில் மட்டும் 1614 படையினர் (படையினருக்காக முல்லைத்தீவு முகாமில் பணியாற்றிய சிவிலியன்கள் உட்பட) உயிரிழந்திருக்கின்றார்கள்.

## பகுதி - 10

அத்தோடு இதே மாதத்தில் கொழும்பு தெகிவளையில் ஓடும் ரயிலில் இடம் பெற்ற வெடிகுண்டுத் தாக்குதலில் 63 பேர் வரை உயிரிழந்தனர்; நானூறு பேர் வரை படுகாயமடைந்தனர்.

மொத்தத்தில் அது ஒரு கறுப்பு ஜூலை ஆகவே கடந்து போயிற்று.

★ ★ ★

முல்லைத்தீவுத்தளம் மீதான தாக்குதலை ஆரம்பித்து இரண்டு நாள்களுக்குள் முகாம் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டது என்பதை இக்கட்டுரைத் தொடரில் முன்னர் பார்த்தோம்.

அந்த இரண்டு நாள்களுக்குள் முகாமிலிருந்த படையினரில் தொண்ணூறு வீதமானோர் கொல்லப்பட்டு விட்டனர். தப்பிப் பிழைத்து ஓடியோரைத் தேடிப் பிடித்து அழிக்கும் நடவடிக்கையில் புலிகளின் சில அணிகள் ஈடுபட்டிருக்க —

மறுபுறத்தில் முகாமிலிருந்து கைப்பற்றிய ஆயுத, தளபாடங்கள் மற்றும் பொருள்களை அவசர அவசரமாக தளத்திலிருந்து அகற்றி பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டு செல்லும் முயற்சியில் புலிகளின் மற்றைய சில அணிகள் ஈடுபட்டிருந்தன.

பாரிய ஜெனரேட்டர்கள், இயங்க முடியாத நிலையிலிருந்த வாகனங்கள் போன்ற — தூக்கிச் செல்வதற்கு சிரமமான—பொருள்களை அகற்றுவதிலும் புலிகளின் அணிகள் கவனம் செலுத்த வேண்டியிருந்தன.

### சிதறிய சடலங்கள்

தாக்குதலினால் முகாமில் சிதறிக் கிடந்த படையினரின் சடலங்கள் தொடர்பாக புலிகளுக்கு இரண்டு விடயங்கள் கவனிக்கப்பட வேண்டியிருந்தன.

1. சிப்பாய்களின் உடைகளில் இருந்த ஹோல்ஸர்கள், அவற்றிலிருந்த கிரனேட்டுகள், ரவைக் கூடுகள், தண்ணீர்க்கான்கள் மற்றும் அது போன்ற யுத்தப் பொருள்கள் ஆகியவற்றோடு அவர்கள் வைத்திருந்த சங்கிலி, மணிக்கூடு போன்ற பெறுமதியான பொருள்களை பாதுகாப்பாக அகற்றுவது.

2. சிப்பாய்களின் சடலங்களை என்ன செய்வது என்பது குறித்து தீர்மானம் எடுத்து அதனைச் செயற்படுத்துவது.

## தொகுப்பு: கவி

படையினரின் மீட்பு அணிகள் எந்நேரமும் முகாமை அண்டிய கடற்பகுதி ஊடாகத் தரையிறக்கப்பட்டு, முகாமுக்குள் நுழையலாம் என்ற சூழ்நிலைக்கு மத்தியில்—

தலைக்கு மேல் வட்டமிடும் கிபிர், புக்காரா விமானங்கள் ஆகியவற்றின் குண்டுத்தாக்குதல் மிரட்டலுக்கு நடுவே —

இது குறித்து அவசர அவசரமாக முடிவெடுக்க வேண்டியவர்களாக புலிகள் இருந்தனர்.

எனவே சூழ்நிலையின் அவசரத்துக்கு ஏற்ப புலிகள் முடிவெடுத்தனர். அதன்படி —

தாக்குதலில் சிதறிப் போன படையினர் சடலங்களில் இருந்து அகற்றப்பட வேண்டிய ஆயுதங்கள் மற்றும் பொருள்களை அகற்றினர். சிதறிய உடல்கள் நேரத்துடனேயே சிதைந்து துர்நாற்றம் வீச ஆரம்பித்து விட்டதால், அவற்றை முகாமுக்குள் ஆங்காங்கே போட்டு எரித்தனர்.

### சடலங்களை கொண்டு போயினர்

சிதறாமல் — ஓரளவு முழுமை கெடாமல் — இருந்த படையினரின் சடலங்களை அவர்களின் சீருடைகளில் இருந்த ஆயுத உபகரணங்களுடன் அப்படியே — லொறி, டிரக்டர்கள் மற்றும் வாகனங்களில் அள்ளிப் போட்டு— வன்னிக்காட்டில் தங்களுக்குப் பாதுகாப்பான தளங்களுக்கு புலிகள் கொண்டு போய்க்குவித்தனர்.

சுமார் எண்ணூறுக்கும் ஆயிரத்துக்கும் இடைப்பட்ட சடலங்கள் இவ்வாறு வேறு இடங்களுக்கு மாற்றப்பட்ட நிலையில்தான் அவற்றை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் அரசாங்கத்திடம் ஒப்படைக்கும் யோசனை குறித்து புலிகளின் தலைமைப் பீடம் ஆராயத் தொடங்கியது.

### அரசின் முயற்சி

முல்லை முகாம் தாக்குதலில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்திருக்கலாம் என்ற செய்தி சர்வதேச செய்தி நிறுவனங்கள் ஊடாகப் பரப்பப்பட்டு முழு உலகமுமே இது பற்றி பிரஸ்தாபித்துக் கொண்டிருக்க—

(5 ஆம் பக்கம் பார்க்க)

## அழித்தொழிப்பு யுத்தம்

யுத்தத்தின் பிரதான கட்டங்கள் மூன்று.

★ தற்காப்பு யுத்தம்

★ தாக்குதல் யுத்தம்

★ அழித்தொழிப்பு யுத்தம்.

மரபு வழி இராணுவமாக விளங்கும் ஸ்ரீலங்காப் படைகள் இவை மூன்றிலும் ஈடுபடுவது புதிதல்ல;

ஆனால் கெரில்லாப் படை அணியான விடுதலைப் புலிகள் முல்லைத்தீவில் நடத்தியது தான் அவர்களைப் பொறுத்தவரை முதலாவது பாரிய அழித்தொழிப்பு யுத்தமாகும்.

மரபு வழி இராணுவம் போல் தம்மை மாற்றிக் கொள்ள புலிகள் எடுக்கும் முயற்சி இதில் பிரதிபலிக்கின்றது.

## புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் பெறுமதி

முல்லைத்தீவு தளம் மீதான தாக்குதலில் சுமார் இருநூறு கோடி ரூபா பெறுமதியான ஆயுத தளபாடங்களைத் தாங்கள் கைப்பற்றியதாக புலிகள் அறிவித்திருந்தது தெரிந்ததே. ஆனால் இது குறித்து அரசுத் தரப்பு உத்தியோகபூர்வ செய்தி எதனையும் வெளியிடவில்லை.

தகர்க்கப்பட்ட 'ரணவிரு' பீரங்கிப் போர்ப் படகின் பெறுமதி மட்டும் பத்துக் கோடி ரூபா.

ஆகவே அரசுக்கு ஏற்பட்ட ஆயுத தளபாட இழப்பை ஓரளவு ஊகிக்க முடியும்.

122 எம்.எம். ஹொவிட்ஸர் பீரங்கி ஷெல் ஒன்றின் பெறுமதி மட்டும் கிட்டத்தட்ட பதினெட்டாயிரம் ரூபா. இத்தகைய சுமார் 900-க்கும் அதிக ஷெல்களை தாங்கள் கைப்பற்றியிருப்பதாகப் புலிகள் கூறுகின்றனர். ஆகவே அவற்றின் பெறுமதிமட்டம் ஒன்றரைக் கோடி ரூபாவுக்கும் அதிகம்.

## பெருஞ் சமர்களில் உயிரிழந்தோர்!

1991 ஜூலை மாதம் நடந்த ஆனையிறவுச் சமரில் புலிகளின் தரப்பில் ஆயிரம் பேர் வரை பலியானதாக அரசாங்கம் அறிவித்தது.

ஆனால் தமது தரப்பில் 526 பேர் பலியாகினர் எனவும், ஆயிரத்து ஐந்நூறு பேர் வரை காயமடைந்தனர் எனவும், படைத்தரப்பில் அறுநூறு பேர் வரை பலியானதாகவும் புலிகள் அறிவித்தனர்.

1993 பூநகரி கூட்டுப் படைத் தளம் மீதான 'தவளைப் பாய்ச்சல்' தாக்குதலில் படையினர் தரப்பில் எண்ணூறு பேர் பலியானதாகவும் தமது தரப்பில் 456 பேர் பலியானதாகவும் புலிகள் அறிவித்தனர்.

ஆனால் பூநகரிச் சமரில் 12 அதிகாரிகள் உட்பட 741 படையினரை தான் இழந்ததாக அரசு அறிவித்தது. அவர்களில் எட்டு அதிகாரிகளும் 233 படையினரும் உயிரிழந்தனர் என்றும், நான்கு அதிகாரிகளும், 396 படையினரும் போரில் காணாமல் போனார்கள் என்றும் அரசு அறிவித்தது.

சுமார் ஆயிரத்து நானூறுக்கும் அதிகமான படையினரை இழக்கச் செய்திருக்கும் முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதலில் 332 புலிகள் தரையிலும், கடலிலும் களப்பலியாகியிருப்பதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் 460 புலிகள் இந்த யுத்தத்தில் உயிரிழந்ததாக பாதுகாப்பு அமைச்சு கூறுகின்றது.

சுமார் 350 புலிகள் வரை உயிரிழந்திருக்கலாம் என்றும் ஆயிரத்து நூறு புலிகள் காயமடைந்திருக்கலாம் என்றும் கொழும்பு இராணுவ விமர்சகர் ஒருவர் தெரிவித்தார்.

# இரு அதிகாரிகளும் 62 சிப்பாய்களும் முல்லை முகாமிலிருந்து தப்பினர்!

தாக்குதலுக்கு இலக்கான முல்லைத்தீவு முகாமிலிருந்த படையினரில் எத்தனை பேர் உயிருடன் மீட்கப்பட்டார்கள்?

இது குறித்து முன்னுக்குப் பின் முரணான தகவல்கள் அவ்வப்போது வெளிவந்தன.

முகாம் தாக்கப்பட்டு சரியாக ஐந்து நாள்கள் கழிந்த பின்னர் முகாமுக்குள் நுழைந்த மீட்புப் படை அணியினர் அங்கிருந்த பாழடைந்த கிணறு ஒன்றிலிருந்தும், மரம் ஒன்றிலிருந்தும் 14 படையினரை மீட்டதாக ஒரு பத்திரிகைச் செய்தி தெரிவித்தது.

'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார இதழின் இராணுவச் செய்தியாளர் இக்பால் அத்தாஸ் இது குறித்து கூறியதாவது:-

''முல்லைத்தீவு முகாம் வீழ்ச்சியுற்று சரியாக நான்கு வாரங்கள் கழிந்த நிலையில் முல்லைத்தீவு முகாமிலிருந்த படையினரில் இரண்டு அதிகாரிகளும், 62 சிப்பாய்களும் பாதுகாப்பாக திரும்பியிருக்கின்றார்கள்.

''சிலர் தென்னை மரத்தில் ஏறி ஒளிந்திருந்தும், சிலர் பாழும் கிணறு போன்ற குழிக்குள் மறைந்திருந்தும் தப்பினர்.

'சில சிப்பாய்கள் காடு வழியே அலைந்து திரிந்த பின்னர், மீட்புப் பணிக்காக தரையிறக்கப்பட்ட கொமாண்டோக்களிடம் வந்து சேர்ந்தனர். மேலும் சிலர் காடுகளில் அலைந்த பின்னர் கொக்குத்தொடுவாய், வெலிஓயா போன்ற இடங்களில் இருந்த முகாம்களுக்கு மட்டுமல்லாமல் ஆனையிறவு முகாமுக்குக் கூட வந்து சேர்ந்தனர்.

'கடும் துப்பாக்கிச் சூடு, பீரங்கித் தாக்குதல்கள் போன்றவற்றுக்கு மத்தியில் கடலில் பாய்ந்த சிப்பாய் ஒருவர் ஒருவாறு நீண்ட நேரம் நீந்தி கடற்படையின் ரோந்துப் படகு ஒன்றை நெருங்கினார். ஆனால களைத்திருந்த அந்தச் சிப்பாய் உடனடியாகக் கடற்படைப் படகில் ஏற்றப்படவில்லை. அவரது அடையாளம் குறித்து படகிலிருந்தோர் தமது விசாரணைகளை முடிக்கும் வரை படகைச் சுற்றிச் சுற்றி அவர் கடலில் மிதக்க வேண்டியிருந்தது.' — என்றார்.

ஆனால் 'த சண்டே ஐலண்ட்' பத்திரிகையின் இராணுவச் செய்தியாளர், முகாமிலிருந்த படையினரில் நால்வர் மட்டுமே நாற்பது கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்து [illegible] முகாமை வந்தடைந்ததாகக் கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
... நூலகம்

நிறைவேற்று அதிகாரம் உள்ள

# ஜனாதிபதி ஆட்சி முறை நீக்கமும் அரசமைப்பு திருத்தச் சட்டத்தில்

## ஜனாதிபதி தெரிவிப்பு

தாம் வாக்குறுதி அளித்த படி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்குவதற்கான வழிமுறைகள் அரசமைப்பு திருத்தச் சட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன என ஹோமகமவில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

முன்னைய ஜனாதிபதிகளைப் போல நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களைத் தாம் மக்களுக்கெதிராக ஒரு போதும் பயன்படுத்தவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

அச்சத்தையும், ஊழலையும் ஒழித்துக் கட்டி சுதந்திரமாக வாழக்கூடிய சூழ்நிலையை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் உருவாக்க வேண்டுமென மக்கள் எதிர்பார்த்தார்கள். இந்த அபிலாஷையை அரசாங்கமும் நிறைவேற்றியிருக்கிறது.

அச்சமும் பயமும் தலைவிரித்தாடிய அந்தக் காலகட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சி இன்று மறந்திருப்பது கவலை தருவதாகும்.

ஊழலை ஒழித்துக் கட்ட அரசாங்கம் பூர்வாங்க நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. உயர்ந்த மட்டத்தில் ஊழல்கள் ஏற்கனவே ஒழித்துக் கட்டப்பட்டிருக்கின்றன. நடுத்தர மட்டத்தில் நிலவும் ஊழல்களை அரசாங்கம் விரைவில் ஒழித்துக் கட்டும் — என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

# பல்கலைக் கழகங்களில் மீன்பிடித்துறைப் பாடநெறி

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்: 30

மீன்பிடித்துறை பற்றிய பாடத்திட்டமொன்று நமது பல்கலைக்கழகங்களில் இல்லை. இக்குறையைப் போக்கும் வகையில் மீன்பிடித் துறை அமைச்சருடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்

மீன் பிடித்துறையில் விஞ்ஞான தொழில் நுட்பம் சம்பந்தமான அறிவாற்றலை மாணவர்கள் பெறக்கூடிய விதத்தில் இந்தப்பாடத் திட்டம் வகுக்கப்படும் என்றும அவர் கூறினர்ர்,

MATHS CENTRE
M. M. V. Road, Nelliady.

AL 97 DAY CLASS
(பகல்நேர வகுப்பு)

பொருளியல் — திரு. அன்ரனி
வர்த்தகம் — திரு. பசில்
அளவையியல் — திரு. சத்தியசீலன்
கணக்கியல் — திரு. சண் — திரு. பார்த்திபன்
தமிழ் — திரு. அமரசிவம் — திரு. ரூபன்
இந்து சமயம், இந்து நாகரிகம் — பிரபல ஆசிரியர்
தூய கணிதம், பிரயோக கணிதம் — திரு. குமுக்கேசன்

ஆரம்பம்: 01-11-96
A. m. 8-30

O/L DAY CLASS
(மீட்டல் பகல்நேர வகுப்பு)
(சகல பாடங்களும்) தவணைரீதியாக.

ஆரம்பம்: 01-11-96
A. m. 8-30
(சி/3369)

## துப்புரவு

வீதி ஓரங்களில் வளர்ந்திருக்கும் பல் பூண்டுகளை வெட்டியும் —

வடிகால்களில் நிறைந்திருக்கும் மண், கற்களை வெட்டி எடுத்தும் — வடமராட்சி வடக்கில் வீதி ஓர திருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் அப்பகுதிகளில் பாவனைக்குதவாத நிலையிலுள்ள சிறு ஒழுங்கைகள் செப்பனிடப்பட்டு திருத்தப்படுகின்றன.

எல்லையில்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாகிஸ்தான் அமைச்சரவை வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

முட்கம்பி போடும் வேலை கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்படும்.

இந்தியா ஏற்கனவே பஞ்சாப் மாநிலத்துக்கும், பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்துக்கும் இடையேயான எல்லையில் முட்கம்பிவேலி அமைத்துள்ளது. (இ-10)

முல்லைத்தீவு...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்நாட்டில் நடைமுறையில் இருந்த தணிக்கை விதிகளைப் பயன்படுத்தி, அப்படி ஏதும் பெரிய உயிரிழப்பு ஏற்படாதது மாதிரியான ஒரு மாயைத் தோற்றத்தை நாட்டு மக்களுக்கு காட்ட அரசுத் தரப்பு முயன்று கொண்டிருந்தது.

இந்த முயற்சியில் அரசைத் தோற்கடிப்பதற்கும்—

அதன் மூலம் அரசுக்கு எதிராக சிங்கள மக்களின் உணர்வலைகளைத் தட்டி எழுப்பவும்—

சர்வதேச மட்டத்தில் தங்களின் தாக்குதல் வெற்றியைப் பரப்பவும்—

இயலுமானால் தென்னிலங்கையில் தமிழர்களுக்கு எதிரான கோப உணர்வைத் தூண்டி, மீண்டும் ஓர் இனக் கலவரத்தை வெடிக்கவைத்து அதன் மூலம் அரசியல் லாபம் தேடவும்—

கொல்லப்பட்ட சிப்பாய்களுக்கு யுத்த தர்மத்துக்கு ஏற்ப உரிய மரியாதை கொடுத்து, அவர்களை கௌரவிப்பவர்கள் போல் தங்களை உலகுக்கு காட்டிக் கொள்ளவும்—

பல நூற்றுக்கணக்கான படையினரின் சடலங்களை அரசிடம் ஒப்படைக்கும் நிகழ்வைப் பயன்படுத்த புலிகள் விரும்பினார்கள்.

ஆனால் இந்த விடயத்தில் புலிகளின் முயற்சி அதிக வெற்றியைத் தரவில்லை. அது ஏன்?

கடைசியாக பல நூற்றுக் கணக்கான இச்சடலங்களை புலிகள் என்ன செய்தார்கள்?

விவரம் நாளைய உதயனில்!

# யாழ்ப்பாணத்துக்கான இந்திய அரசின் நிவாரணம்

## கொழும்புத் துறைமுகம் வந்தது

யாழ்ப்பாணத்துக்கான இந்திய நிவாரண உதவியின் முதல் தொகுதி கொழும்புத் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்துள்ளது.

யாழ் குடாநாட்டில் வழமை நிலையை ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்கு உதவும்படி சர்வதேச சமூகத்துக்கு இலங்கை விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து இந்தியா நிவாரண உதவியாக ஒரு தொகுதி புளுங்கல் அரிசியை அனுப்பி வைத்துள்ளது.

இந்த ஆண்டின் ஜூன் மாதம் புதுடில்லியில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருடன் இடம்பெற்ற சந்திப்பின் போது அவசர நிவாரண நடவடிக்கைகளுக்கு 2 கோடி இந்திய ரூபா பெறுமதியான புளுங்கல் அரிசியை வழங்குவதற்கு இந்திய பிரதமர் தேவகௌடா உறுதி அளித்திருந்தார்.

முதல் தொகுதி நிவாரணப் பொருள்கள் புனர் நிர்மாண, புனர்வாழ்வு அதிகார சபையின் ஊடாக வட பகுதி மக்களுக்கு அனுப்பிவைக்கப் படும்.

எஞ்சியவை அடுத்த சில வாரங்களில் கொழும்புத் துறை முகத்தை வந்தடையும். (இ-4)

## சேவை நலன் பாராட்டு விழா

நாற்பது ஆண்டுகளாக பல பாடசாலைகளில் ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றி மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயத்தில் அதிபராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற கி. சிவமணி அவர்களுக்கு இன்று புதன்கிழமை பிரஸ்தாப பாடசாலையில் சேவை நலன் பாராட்டுவிழா நடைபெறுகிறது. (இ)

## அரச ஊழியருக்கு காப்புறுதி திட்டம்

6 இலட்சம் அரசாங்க ஊழியர்கள் நன்மை அடையக் கூடிய புதிய காப்புறுதித் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது என பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் பெருந்தோட்டத் துறை மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கா தெரிவித்துள்ளார்.

1997 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய காப்புறுதித் திட்டத்தின்மூலம் 6 இலட்சம் அரசாங்க ஊழியர்களும் அவர்களைச் சார்ந்திருக்கின்றசுமார் 30 இலட்சம்பேரும் நன்மை அடைவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-4)

## மக்கள் தொடர்பு வெள்ளி இல்லை

யாழ். மோட்டார் போக்குவரத்துக்கிளையில் ஒவ்வொரு வெள்ளியும் அலுவலக வேலைகள் மட்டும் நடைபெறுவதால் அன்றைய தினம் மக்களுடனான தொடர்புகள் நடைபெற மாட்டாது என்று மோட்டார் போக்குவரத்து திணைக்கள உதவி ஆணையாளர் பத்மநாதன் அறிவித்துள்ளார். (இ-100)

கொழும்பில்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிடைத்திருந்தால் மறுநிமிடமே அவர் கைது செய்யப்பட்டிருப்பாரே தவிர, யாழ். செல்ல விண்ணப்பம் போட வெளியில் இருக்க மாட்டார்.

அரசாங்கத்தைப் பொறுத்த வரை இலங்கை ஒரு நாடு. ஆனால் பயணிகள் விடயத்தில் கடைப்பிடிக்கப்படும் அணுகு முறைகள் அதற்கு நேமாறானதாக உள்ளது.

புலிகள் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இருக்கும் மக்கள் வெளியேறுவதற்குத்தான் கட்டுப்பாடுகள் விதித்திருந்தனர். வெளியே இருந்து உள்ளே செல்ல கட்டுப்பாடுகள் இருந்ததில்லை.

ஆனால் யாழ்குடாநாட்டை படையினர் கட்டுப் பாட்டில் கொண்டு வந்தபின்னர் அங்கு செல்வதற்கும் அனுமதி கேட்டு மக்கள் காத்திருக்க வேண்டி இருக்கிறது.

45-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 29 — 11 — 1987
உதிர்வு: 16 — 09 — 1996

செல்வி திவ்வியா விஜேந்திரன்

விதியை மதியால் வெற்றி கொள்வோமென்றோம் அம்மா!
விதிதான் மதியை மறைத்து திவ்வியை
கொண்டேகியதல்லோ - ஐயகோ!
கதி கலங்கி நிற்கிறோம் கண்மணியே நீயில்லாமல்

ஆத்ம சாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன்பிரிவால் துயருறும்:
அ சிவராஜா குடும்பத்தினர்.

பாடசாலை வீதி,
நாவற்குழி.
(8945)

1-ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 27 — 09 — 1956
ஆண்டவன் திருவடியில்: 11 — 11 — 1995

சதாசிவம் இராசரத்தினம்
(மேற்பார்வையாளர், பனை, தென்னை வள அ. பி. கூ. ச.)

அன்பின் - திருவுருவே, பாசத்தின் - உறைவிடமே, பண்பின் சிகரமே கணப்பொழுதில் எம்மை எல்லாம் தவிக்க விட்டுச் சென்ற எங்கள் அன்புத் தெய்வமே! எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்டீர்களே. அப்பா பார்த்த இடத்தில் எல்லாம் உங்கள் அழகுமுகம் தோன்றுதப்பா. சிந்தை கலங்கி யிங்கு திணறித் துடிக்கின்றோம்.

எம்மைக் கண்ணின் மணிபோல் காத்த எம் தெய்வமே! ஓராண்டு என்னப்பா ஓராயிரம் ஆண்டு தான் சென்றாலும் உங்களைத் தொடர்ந்து வரும்வரை ஆறாதப்பா எம் இதயம். தினமும் உங்கள் ஆத்மசாந்திக்கு வேண்டி கண்ணீர்ப் பூக்களைச் சமர்ப்பிக்கும்:

அன்பு மனைவி:
திருமதி க. இராசரத்தினம்,
மகள்: கீர்த்திகா,
மகன்மார்: பிரசாந், பிரகாஷ்,
தாய்: திருமதி அ. சதாசிவம்.

வாகையடி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
(43338)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மகாதேவா ஜோதிடம்

சகல ஜோதிட ஆலோசனைகளுக்கும் ஜோதிடர் மகாதேவாவை இல. 140, செல்லர் வீதி, கல்வியங்காட்டுச் சந்தைக்கு அருகாமை எனும் முகவரியில் தினமும் சந்திக்கலாம்.

(43270)

## திருமண சேவை

வியாழன், வெள்ளியில் புலோலியிலும், ஏனைய நாள்களில் நாவலர் றோட் (பிறவுண் றோட்சந்தி), இல:228 உள்ள வீட்டிலும் சந்திக்கலாம். படம், குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். 'துர்க்கா திருமண சேவை.'

(43372)

## புத்தகப்பிரியர்களே

தென்மராட்சியில் பல அரிய நூல்களை இரவல் பெற்று வாசிக்க நாடுங்கள்: லிங் லெண்டிங் லைப்ரரி (Ling-Lending Library), இல: 41, தபாலக வீதி, சாவகச்சேரி.

(43084)

## மணமகன் தேவை

அரச பாடசாலையில் ஆசிரியையாகப் பணிபுரியும் 28 வயதான கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த இந்து மத பெண்ணுக்கு மணமகன் தேவை. தொடர்பு: இல. 552, மே/பா உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (43392)

# குண்டுடன் வந்த கரும்புலி கைதானார்?

கொழும்பு நகரில் குண்டுத் தாக்குதலை நடத்தும் நோக்கத்துடன் குண்டுகள் பொருத்தப்பட்ட மேலங்கியுடன் வந்த விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த கரும்புலி வீரர் ஒருவரைப் பொலீசார் கைது செய்துள்ளனர் என வெரித்தாஸ் வானொலி சிங்களச் சேவையில் தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்ற பல மேலங்கிகளை விடுதலைப் புலிகள் கொழும்புக்கு கொண்டு வந்துள்ளனர் எனச் சந்தேகிப்பதாக பிரதிப் பொலீஸ் மா அதிபர் டி. எம். திஸாநாயக்கா தெரிவித்துள்ளார் என அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-10)

# இறந்த அறுவரும் தமிழர்கள்

மவுசாக்கலை நீர்த்தேக்கத்தில் கடந்தஞாயிறன்று இடம் பெற்ற படகு விபத்தில் உயிரிழந்த அறுவரும் தமிழர்கள் ஆவர்.

இறந்தவர்களில் மூவர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் ஒருவர் கர்ப்பிணி என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-10)

# ஆஸ்பத்திரி மூடப்படும் நிலையில்

கொழும்பு, ஒக். 30

அக்கராயனில் இயங்கும் கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலை மூடப்படும் நிலையில் இருந்து வருவதாக கிளிநொச்சி அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

கையிருப்பில் இருந்த மருந்துப் பொருள்கள் முடிவடைந்து வருகின்றன எனவும் —

வவுனியாவில் இருந்து மருந்து இரு வாரங்களுக்குள் வராவிட்டால் வைத்திய சாலைக்கு வரும் நோயாளிகளுக்கு மருந்து வழங்க முடியாத நிலை ஏற்படும் எனவும் — அரசாங்க அதிபர் கூறினார். (இ-4)

---

யாழ். மாவட்ட

## விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வது)

# பண்டிகை மலிவுவிற்பனை

மேற்படி சமாசத்தில் பின்வரும் பொருள்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குள்ளன.

துணிவகை/ மீற்றர்

| | |
|---|---|
| சலஞ்சர் | 64-00 |
| பட்டசில்க் பிளேன் | 101-30 |
| பப்ரா கொலக்சன் | 137-97 |
| செக் சேட்டிங் | 145 56 |
| ரொன்சன் சேட்டிங் | 98-30 |
| சிலிப்ரெக்ஸ் சேட்டிங் | 95-14 |
| கஸ்பர் சேட்டிங் | 138-42 |
| 65 35 சேட்டிங் | 80-65 |
| கௌபோ சேட்டிங் | 131-60 |
| எரபா சேட்டிங் | 140-07 |
| ரடோ சேட்டிங் | 145-56 |
| பெனியன் | 34-52 |
| கலர்ப் பப்பிளின் | 53-85 |
| கொட்சீற் | 56-25 |

மற்றும் பிளாஸ்டிக் வாளிகள் (மூடிகளின்றி) பல்வேறு அளவுகளில் ரூ. 68/- இல் இருந்து 155/- வரையான விலைகளிலும், சிக்னல் பற்பசை, பிறைபான் (Fri Pan) வகைகள் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் விற்பனைக்குள்ளன.

பொது முகாமையாளர்,
யாழ் மா.வி உ.ச நு.கூ.ச.
சமாசம்.

(சி/3367)

---

# 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சங்கரப்பிள்ளை தம்பிஐயா

(ஓய்வு பெற்ற நிதிப் பொறுப்பாளர், மலேசிய கல்வித் திணைக்களம்)

மலர்வு: 16-03-1906 உதிர்வு: 14-11-1992

திதி: 30 - 10 - 1996

புதன்கிழமை

எங்கள் உள்ளங்களில் என்றும் ஒளிவீசி, நிலையாக நிலைத்து நிற்கும் அன்புத் தெய்வமே! எம்மை விட்டுப் பிரிந்தாலும், நீங்கள் எம்முடன் இருக்கின்றீர்கள். உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை என்றும் பிரார்த்திப்போம்.

அன்பு மனைவி, மக்கள்,
பெறாமக்கள், மருமக்கள்,
சகோதரிகள், மைத்துனர்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

செல்வானந்த வாசா,
இணுவில் மேற்கு,
சுன்னாகம்.

(8939)

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 14 | 10 |
| 10 | 11 |
| 1910 | 1995 |

அமரர்

## மூத்ததம்பி முத்துகிருஸ்ணபிள்ளை

(பிரபல வர்த்தகர், கிருஸ்ணா ஸ்ரோர் உரிமையாளர்)

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து எம்மை அன்போடும், பண்போடும், பாசத்தோடும் வழி நடத்திய அன்புத் தெய்வம் அப்பாவே! ஆண்டு ஒன்று போனாலும் உங்கள் நினைவுகள் எங்கள் உயிருள்ள வரை மாறாது.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மகன், மருமகள், பேர்த்தி.

88/9, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(43201)

---

# கண்ணீர் அஞ்சலி

## கா. மயில்வாகனம்

எமது சக மாணவன் பரமேஸ்வரனின் அன்புத்தந்தை மயில்வாகனம் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவருக்கும், அவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

— நண்பர்கள்
HNDA. 4 ஆம் வருடம்
(பகுதி நேரம்)
உயர் தொழில்நுட்பக்கல்வி நிறுவனம்,
யாழ்ப்பாணம்.

(43394)

---

# ஓராண்டு நினைவலைகள்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 24 | 11 |
| 10 | 11 |
| 1970 | 1995 |

செல்வன்

## தர்மலிங்கம் பாலச்சந்திரன்

(சந்திரன்)

திதி: 30-10-1996

சந்திரன் என்னும் அன்புப்பெயர் கொண்டாயோ
சடுதியில் எம்மை விட்டுமே பிரிந்தாயோ
ஓராண்டு சென்றதையா ஓயாது உன்நினைவு
ஆறாய்ப் பெருகுதையா அவனியிலே என்றும்
நீயில்லா உலகில் நிம்மதியும் இல்லையையா
சிரித்த உன்முகமும் ஈச்சங்காய்ப் பற்களையும்
தினமும் காணாது சிந்தை கலங்குதையா — நீ
கனியாக முன்பே விதையாகிப் போனாயோ
நெஞ்சம் உன்னை நினைக்கிறது ஐயா — உன்
நினைவு எழஎழ எமக்கொரு வேளைவரும்
இறப்பும் பிறப்பும் இறைவன் போடும் புதிர்க்கணக்கு
இழந்தே விட்டோம் உன்னையென்று எண்ணவே
முடியவில்லை
இதயமெல்லாம் உன்நினைவால் அலைமோதி
அழியுதையா
உன் எழில் நிலாவதனத்தை இனியெப்போ காண்போம்
காத்திருப்போம் என்றும் கண்ணேயுன் வரவிற்காய்.
சாந்தி! சாந்தி! சாந்தி!

உன்பிரிவால் துயருறும்:
தாய், தந்தை, தம்பி, தங்கை,
உறவினர்கள், நண்பர்கள்.

நிரந்தர முகவரி:
நகுலேஸ்வரம் வீதி,
கீரிமலை.

தற்போதைய முகவரி:
இருபாலை கிழக்கு,
கோப்பாய்.

(43380)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# வெற்றிலைக்கேணித் தாக்குதலுக்கு பதிலடியாகவே திருமலை தாக்குதல்

## விடுதலைப் புலிகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 30

கடந்த 20 ஆம் திகதி வெற்றிலைக்கேணிப் பகுதியில் உள்ள பூனைத்தொடுவாய்ப் பகுதியில் அமைந்துள்ள கடற்புலிகளின் ராடார் நிலையம் மீது அரசபடைகள் நடத்திய தாக்குதல் முறியடிக்கப்பட்டது. அதற்குப் பதில் நடவடிக்கையாகவே சாள்ஸ் படையணி, நளாயினி படையணி, கடற் கரும்புலிகள் ஆகிய படையணிகள் ஒன்று சேர்ந்து ஸ்ரீலங்கா கடற்படைத் தலைமையகமான திருகோணமலைத் துறைமுக நுழைவாயிலில் வைத்து ரோந்தில் நின்ற டோறாப் படகு மீது கடந்த வெள்ளியிரவு கடற்கரும்புலித் தாக்குதல் நடத்தப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இவ்வாறு அறிவித்திருக்கின்றது.

இரவு 10.35 மணியளவில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது. டோறாப் படகு தாக்குதலில் முற்றாக மூழ்கியது. அதிலிருந்த 2 அதிகாரிகள் உட்பட 12 கடற்படையினர் கொல்லப்பட்டனர். மேலும் தொடர்ந்து நடந்த சண்டையில் மற்றொரு டோறாப் படகு சேதத்துடன் பின் வாங்கியது. இச் சண்டை நள்ளிரவு 1 மணி வரை நீடித்தது.

இத்தாக்குதலில் கடற் கரும்புலிகளான மேஜர் நளினன் (திருகோணமலை), கப்டன் ஜெயராஜ் (காரைநகர்) ஆகியோர் சாவடைந்தனர்.

— இவ்வாறு விடுதலைப் புலிகள் மேலும் தெரிவித்தனர். (உ)

## கிளிநொச்சியில் மோதல்

கிளிநொச்சி தட்டுவன்கொட்டி பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் நேற்று நடந்த மோதல் ஒன்றில் இரு படையினர் கொல்லப்பட்டனர்.

இச் சண்டையில் 18 புலிகள் கொல்லப்பட்டனர் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது. (இ-3)

# படையினர் அனுமதியுடன் கூ. மொ. வி. முகவர்கள்

கொழும்பு, ஒக். 30

பாதுகாப்புப் படையினரின் உத்தரவாத சான்றிதழுடனேயே கூ. மொ. வி நிலைய முகவர்கள் யாழ்ப்பாணத்தில் நியமிக்கப்பட வேண்டும்

இப்படி படையினர் அறிவுறுத்தி வருகின்றனர் என கொழும்புப்பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது

யாழ்ப்பாணத்தில் 20 தனியார் வியாபாரிகள் கூ. மொ. வி. நிறுவன முகவர்களாக யாழ். அரச அதிபரின் சிபார்சுக்கமைய நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் பலரை முகவர்களாக நியமிக்க வேண்டும் என அரச அதிபர் கேட்டிருந்தார்.

ஆனால் இதற்கு தமது உத்தரவாதச் சான்றிதழ் வேண்டும் என படையினர் வலியுறுத்தி வருவதாக கூ. மொ. வி. நிலைய வட்டாரங்கள் தெரிவிப்பதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-3]

## நம்பிக்கை

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நடக்கும் போரில் வெற்றி காண வேண்டுமானால் தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெறுவது அவசியம் என்று ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

இதற்கு முன்னர், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தமிழர்களின் மனங்களை வெல்ல வேண்டும் என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டு வந்தது.

எனவே போரில் வெல்வதானாலும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதானாலும் தமிழர்களின் நம்பிக்கையைப் பெறுவது அவசியம் என்று உணரப்படுகிறது. அதுவே உண்மையுமாகும். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதும் வரவேற்கத்தக்கது.

உண்மையைக் கண்டு பிடிப்பதால் அல்லது உணர்ந்து கொள்வதால் மட்டும் எதுவும் ஆகிவிடாது. உணர்ந்ததைச் செய்து முடிக்க வேண்டும். அதன் மூலமே எதிர்பார்த்ததை நிறைவேற்றலாம்.

யாழ்ப்பாண மக்களை எடுத்துக் கொண்டால் அவர்களின் அன்றாட வாழ்க்கை நிலையில் பெரிதாக இன்னும் மாற்றங்களைக் காணமுடியவில்லை

உற்பத்தி, வேலைவாய்ப்பு, பாதுகாப்பு, அமைதி நிலை உட்பட பல அம்சங்களும் பெரிய அளவில் இயல்பு நிலைக்குத் திரும்பிவிட்டதாகக் கூறுவதற்கில்லை. சாண் ஏற முழம் சறுக்கும் போக்காகவே காண முடிகிறது. அத்தியாவசிய சேவைகளில் சிறிய அளவிலான முன்னேற்றம் தென்பட, பாதுகாப்புக் குறித்து அச்சப்படுமளவுக்கு சூழ்நிலை மாறுகிறது.

எனவே தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெறுவது என்று பேச்சளவில் கூறுவதோடு நிற்காமல், அதற்கேற்றவாறு திட்டமிட்ட ரீதியில் அரசு செயற்படுவது அவசியம். தமிழர்களின் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட சகல அம்சங்களிலும் நம்பிக்கையைப்பெறுவதில்கவனம் செலுத்தப்படவேண்டும்.

அதற்குச் சமாதானம், அமைதிச் சூழ்நிலை என்பன அத்திவாரமாக அமைய வேண்டும். அவை எய்தப்படுவதற்கு தமிழர்களின் உரிமைகள் அங்கீகரிக்கப்படுவதோடு அவர்களின் அரசியல் அபிலாசைகள் குறித்த புரிந்துணர்வும் அவசியம்.

தங்களுக்கு கிடைக்கப் போவது இது தான்; அதுவும் நிச்சயமாகக் கிடைக்கும்; இம்முறையும் தாம் ஏமாற்றப்பட மாட்டார்கள்; அதனால் தமது அபிலாசைகள் நிறைவேறும் என்ற நம்பிக்கையை தமிழ் மக்களிடம் உருவாக்குவதே பிரதானம்.

இந்த வழியில் அரசு சிந்தித்து அதன் பிரகாரம் செயற்படுமானால் தமிழர்களின் நம்பிக்கையைப் பெறலாம்.

தங்கள் உரிமைகளைப் பெறுவது, வாழ்க்கை நிலையில் முன்னேறுவது என்பவற்றில் தமிழ் மக்களுக்கு கடந்த காலங்களில் ஏராளமான கசப்பான அனுபவங்களும், பாடங்களும் உள்ளன.

எனவே அவர்களின் நம்பிக்கையைப் பெறுவது என்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல. இதனை மனதில் வைத்து அரசு செயற்பட வேண்டும்.

நம்பிக்கையைப் பெறுவது என்பது அமைதியை உருவாக்குவதிலும், புரிந்துணர்வை உண்டாக்குவதிலுமே தங்கியுள்ளது. இது இமாலயக் காரியம்.

# சந்திரிகாவைச் சந்தித்து அஷ்ரப் உரையாடினார்

## பிரச்சினையைத் தீர்க்க முயற்சி

கொழும்பு, ஒக். 30

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப்பும் நேற்று முன் தினம் காலை சந்தித்து சர்ச்சைக்கு காரணமாக விருந்த விடயங்கள் குறித்துத் கலந்துரையாடினார்கள்.

சுமார் மூன்றரை மணி நேரம் இந்தப் பேச்சு நீடித்தது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு அமைக்கப்பட்ட போது பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கும் இடையில் செய்யப்பட்ட உடன்பாட்டில் எதுவித பாதிப்பும் ஏற்பட இடமளிக்கப்பட மாட்டாது என்று அஷ்ரப்பிடம் ஜனாதிபதி வலியுறுத்தினார். (இ-3)

# முதியவரை விடுவிக்க பரிந்துரை

72 வயதான முதியவர் ஒருவரை விரைவில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு நீதிமன்றம் சட்டமா அதிபரைக் கேட்டுள்ளது.

குமாரபுரம், பரந்தனைச் சேர்ந்த அம்பலம் மயில்வாகனம் (வயது 72) என்ற இவர் கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவரை விடுதலை செய்யக் கோரி சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனு மீதான விசாரணையின் போதே இவரை விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் கேட்டுக் கொண்டது. [இ-8]

## சமய சந்நிதிகளில்

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ள மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இன்று புதன்கிழமை எண்ணெய்சாத்தும் நிகழ்வு நடைபெறும் (அ-30)

* * *

வட்டுக்கோட்டை கொட்டைக்காடு, நொச்சிக்காட்டுப் பிள்ளையார் கோயில் வருடாந்த சங்காபிஷேகம் இன்று நடைபெறும். அதனைத் தொடர்ந்து மகேஸ்வரபூஜையும் இடம்பெறும். (அ-15)

### கோணேஸ்வரர் ஆலயத்தை

# புனித நகராக்குவதற்கான ஆரம்ப கட்ட வேலைகள்

## துரிதமாக நடைபெறுகின்றன

கொழும்பு, ஒக். 30

திருக்கோணஸ்வரர் ஆலயப் பகுதியை புனித நகராக்குவதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று நகராட்சி மன்றத் தலைவர் சூரியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதியினால் இராணுவத்தினருக்கு அறிவிக்கப்பட்டு, அவர்கள் புனிதநகர் பிரகடனம் தொடர்பான விவரங்களைக் கேட்டறிந்ததாகவும் அவர் தெரிவித்தார். (இ-3)

# மாகாண சபையின் கீழ் கூட்டுறவு நிர்வாகம்

கொழும்பு, ஒக். 30

பிரதேச செயலர் வசமிருந்த உள்ளூராட்சி, கூட்டுறவு நிர்வாகம் எதிர்வரும் ஜனவரி தொடக்கம் வடக்கு - கிழக்கு மாகாணசபையால் நேரடியாக நிர்வகிக்கப்படும்.

இதற்கு ஆளுநர் காமினி பொன்சேகா அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

இதன் பிரகாரம் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சகல மாவட்டங்களிலும் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள அலுவலகம் மீண்டும் திறக்கப்படவுள்ளன. (இ-3)

# ஆஸ்பத்திரி எக்ஸ்றே பிரிவு ஸ்தம்பிதம் அடையும் நிலை

## 'பிலிம்' முடிவடையும் கட்டத்தில்

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ். போதனா வைத்திய சாலையின் ''எக்ஸ்றே'' பிரிவு இன்னும் ஓரிரு வாரத்தில் ஸ்தம்பிதமடையும் நிலை உருவாகியுள்ளது.

''எக்ஸ்றே'' பிரிவில் தற்போது பாவனையில் இருக்கும் எக்ஸ்றே ''பிலிம்'' கையிருப்பு குறைந்து வருவதே இதற்குக் காரணம்.

''எக்ஸ்றே''யின் தேவைகள் அதிகரித்துள்ள தற்போதைய நிலையில் இருக்கும் ''எக்ஸ்றே'' பிலிம்களையும் இயன்றவரை அத்தியாவசிய தேவைகளுக்கே மட்டுப்படுத்தினாலும் கூட இன்னும் சுமார் ஒருவாரம் செயல்படுவதே சிரமம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றிப் பலதடவை நிர்வாகம் மேலிடத்தில் தொடர்பு கொண்டும் எந்த ஒரு நடவடிக்கையும் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரியவருகிறது. (இ )

## நாளை

ஐப்பசி 15

வியாழக்கிழமை

திதி: பஞ்சமி

முன் இரவு 9 24 வரை.

நட்சத்திரம்: மிருகசீரிடம்

காலை 6 16 வரை.

ராகுகாலம்: 1.33 - 3,03

சுபநேரம்: 7.33 - 9.03

(பகலுக்கும் இரவுக்கும் [illegible])

## வாசகர் திருமுகம்

# வயல் நிலங்களில் கண்ணீர்!

விவசாய அதிகாரிகளும் செயலக நிர்வாக பீடமும் மாறி மாறி விட்ட பத்திரிகைத் தகவல்கள் மறக்கப்பட்டவையாகி விட்டன. விளைவு அலிகாமம் விவசாயிகள் மட்டுமலல் வயல் நிலங்களும் கண்ணீர் விடுகின்றன!

பல்லாயிரம் ஏக்கர் விளை நிலங்கள் விதை நெல் வரும் என்ற சொல்லை நம்பி இன்று வெறும் நிலங்களாகக் காட்சி தருவது பெரும் வேதனையாகும். அத்துடன் எதிர்காலத்தில் பெரும் பாதக விளைவை எதிர்நோக்கவும் வைத்துள்ளது.

விதை நெல் தருவோம் என்ற அறிக்கை பத்திரிகையில் வெளிவராவிடில் இன்று 90 சதவீதமான வயல் நிலங்கள் பயிர் நிலங்களாகக் காட்சி தரும் நிலை உருவாகியிருக்கும்

எப்படியாவது, கூடிய விலையிலாவது விதை நெல்லைக் கொள்முதல் செய்து விவசாயிகள் வயல்களை விதைத்திருப்பார்கள். ஆனால் இன்று விவசாயியும் விளை நிலங்களும் ஏமாற்றத்தால் விட்ட கண்ணீர் தான் வயல் நிலங்களில் மிஞ்சியுள்ளது.

இதனால் ஏற்படும் விளைவை, நஷ்டத்தை, அரிசித் தட்டுப்பாட்டை யார் பொறுப்பேற்கப் போகிறார்கள்? அறிக்கை விடுத்த அதிகாரிகளா?

விவசாயிகளின் வேதனைக்கும், அடுத்த வருட அரிசித் தட்டுப்பாட்டால் கஷ்டமுறப் போகும் மக்களுக்கும் பதில் சொல்வது யார்?

த. கோவிந்தசாமி

சந்தைச் சதுக்கம்,
சங்கானை.

# வடபகுதியும் வர்த்தமானியும்

கடந்த ஒரு தசாப்தத்துக்கு மேலாக, அரசாங்கம் வெளியிடும் வர்த்தமானி, வடபகுதி மக்களுக்கு உரிய நேரங்களில் கைக்குக் கிட்டியதாக இல்லை.

அப்போதெல்லாம் போக்குவரத்துக் கஷ்டத்தாலும் ஏனைய வசதிக் குறைவுகளாலும் வர்த்தமானிகளை உடனுக்குடன் தருவிக்கமுடியவில்லை என்று அரச அதிபர்களும் பிரதித் தபால் மா அதிகாரிகளும் கூறி வந்தனர்.

ஆனால் இப்போது கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்துகள் நடைபெறுகின்றன.

வர்த்தமானிகள் உரிய காலத்தில் கிடைத்தால், அரசாங்க வெற்றிடங்களுக்கு நேர காலத்துடன் விண்ணப்பிக்க வாய்ப்புக் கிடைக்கும். அப்போது தான் மக்கள் வர்த்தமானி அறிவித்தல்களின் முழுப் பயனையும் அடைய முடியும்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட பகுதியினரைக் கவனம் எடுக்குமாறு, குடாநாட்டு மக்கள், குறிப்பாகப் படித்த இளைஞர்கள் சார்பில் வேண்டுகிறேன்.

க. அச்சுதன்

சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிஸ் சம்பவம்

# திட்டமிட்ட கொலை என்கின்றனர் பிரெஞ்சு விசாரணையாளர்கள்

மணிலா, ஒக். 30

பாரிஸில் விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் கொல்லப்பட்டமை அரசியல் உள் நோக்கோடு துல்லியமாகத் திட்டமிடப்பட்டுச் செய்யப்பட்ட படுகொலைகள் என்று பிரெஞ்சு நாட்டு விசாரணையாளர் தெரிவிப்பதாக வெரித்தாஸ் வானொலி செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ்க் குழுக்களுக்கிடையேயான போட்டியில் நடந்த கொலை இது என்ற இலங்கை அரசின் வாதத்தினை பிரெஞ்சு அதிகாரிகள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும்—

கொலை செய்வதை தொழிலாகக் கொண்ட கூலிப்படை ஆள்தான் இவ்வளவு துல்லியமாகத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்றும்— மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச நிதிப் பொறுப்பாளர் கந்தையா பேரின்பநாதன் மற்றும் பாரிஸில் இருந்து வெளியாகும் ''பாரிஸ் ஈழமுரசு'' பத்திரிகை ஆசிரியர் கந்தையா கஜேந்திரன் ஆகிய இருவர் கடந்த ஞாயிறு இரவு பாரிஸில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டது தெரிந்ததே

இந்தக் கொலைகளுக்கு இலங்கை அரசே காரணம் என்று விடுதலைப் புலிகள் குற்றஞ் சாட்டி உள்ளனர். (இ-3)

## யாழ். வரும் அரச ஊழியர் தங்க விருந்தினர் விடுதி

கொழும்பு, ஒக். 30

கொழும்பில் இருந்து அலுவலகக் கடமைக்கென யாழ். வரும் அரசாங்க ஊழியர்கள் யாழ். நகரில் தங்குவதற்கென வடமாகாண புனரமைப்பு அதிகார சபை, யாழ் செயலகம் அருகில் விருந்தினர் விடுதி ஒன்றை அமைத்துள்ளது.

கொழும்பில் இருந்து யாழ். வரும் அரச ஊழியர்களுக்கு தங்குமிட வசதியில்லாத காரணத்தினால் அவர்கள் உடன் கொழும்பு திரும்பி விடுகின்றனர் என்றும் —

இந்த விடுதியை அமைத்தது மூலம் இவர்கள் இங்கு தங்கி இருந்து கடமையை நிறைவு செய்து செல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3)


யா/ யூனியன் கல்லூரி

தெல்லிப்பழை. (மருதனார்மடம்)

ஆண்டு 6 க்கான அனுமதி - 1997

மேற்படி அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உரிய படிவங்களைக் கல்லூரி அலுவலகத்தில் பெற்று விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 20-11-1996

இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

— அதிபர்

(43400)



சுன்னாகம்

கபிரியேல் வைத்தியசாலை

மருத்தெண்ணெய் வகைகள், மருந்துகள், சிகிச்சை முதலியன அளிக்கப்படும்.

★ K. K. S. வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்

★ புகையிரத வீதி, சிவன் கோயிலடி சுன்னாகம்.

Dr. ஜி. எட்வேட் ஐயா L. A. M. P., R. I. M. P. வைத்தியாச்சார், வைத்தியபூபதி.

579/2, கடற்கரை வீதி, புனித செபஸ்ரியார் கோயிலடி, குருநகர், யாழ்ப்பாணம்

(43364)


## மரண அறிவித்தல்

### காசிப்பிள்ளை நவரத்தினம் (நவம்)

உசனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இளைப்பாறிய சாவகச்சேரி நகரசபை உத்தியோகத்தருமாகிய (R.O) காசிப்பிள்ளை நவரத்தினம் 29-10-96 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வரும், உமாமகேஸ்வரியின் அன்புக் கணவரும் சறோஜினி (கனடா), சாந்தினி (கனடா), நவக்குமார் (Commercial Bank, Jaffna), சிவகுமார் (கனடா), ரவிகுமார் (இத்தாலி) றஜனி (கொழும்பு), நளாயினி (கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனும் தேவபாலன் (கனடா), சிவானந்தன் (கனடா), தயாவதி, பரிபூரணி (கனடா), ஜெனி (இத்தாலி), மதீஸ்வரன் (Grindlays Bank, Colombo) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (29-10-96) உசனில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. நவக்குமார்
(மகன்)

உசன்
மிருசுவில்.

(8947)


மேலும் மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்


இராணுவ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்துகின்றார்கள். நாம் அதனை உணர்ந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.

அரசாங்கம் தமிழ் மக்களின் உரிமைகளை அவர்களுக்கு வழங்கி, பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கப் போவதாகக் கூறுகின்றது. ஆனால் தமிழ் மக்கள் மீது இத்தகைய மனிதாபிமானமற்ற கொடூரச் செயல்களைக் கட்டவிழ்த்து விட்டு விட்டு தீர்வு எதனையும் காணமுடியாது. எனவே இத்தகைய கொடூரச் செயல்கள் நடைபெறாமல் தடுக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்

காணாமல் போன மாணவி கிருஷாந்தியைப் புலிகளே கடத்திக் கொன்று விட்டார்கள் என்று பலாலி ஒலிபரப்பில் திரும்பத் திரும்பக் கூறப்பட்டது. ஆனால் உண்மையில் நடந்தது என்ன?

கடத்திச் செல்லப்பட்ட யுவதியைத் தேடிச் சென்ற தாயும் சகோதரனும் அயலவரும் கூட படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

இதனைச் சாதாரண சட்டத்தின் கீழ் விசாரிப்பதாகக் கூறி, காலத்தை இழுத்தடித்து, குற்றம் புரிந்தோர் தப்பிப் போக இடமளித்து விடக் கூடாது

எனவே உடன் இராணுவ நீதிமன்ற விசாரணை நடத்தி உடன் தீர்ப்பு வழங்கி, இனி மேல் இப்படி நடைபெறாமல் பார்ப்பதை உறுதி செய்ய வேண்டும்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்தல், தடுத்து வைத்தல், விசாரணை நடத்தல் போன்றவை தேவை தான். அவற்றில் நியாயம் இருக்கலாம். ஆனால் அவை ஒழுங்கு முறைப்படி செய்யப்படவேண்டும். — என்றார். (உ)


தேவை

தையல் வேலைக்கு இருபாலாரும் தேவை. பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

மேவின் தையல் நிலையம்

195, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

அல்லது

[illegible]
(43391) யாழ்ப்பாணம்.




# தென் ஆபிரிக்காவுக்கு மற்றும் ஒரு வெற்றி

ராஜ்கோட், ஒக் 30

மூன்று நாடுகள் பங்குபற்றும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் தென் ஆபிரிக்கா இந்தியாவை 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 48.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் 185 ஓட்டங்களுக்கு இழந்தது ஸ்ரீநாத் 53 ஓட்டங்களைப் பெற்றார்.

தென் ஆபிரிக்க அணி 5 விக்கெட் நட்டத்துக்கு 188 ஓட்டங்களைப் பெற்றது. இவ்வணியைச் சேர்ந்த ஜொன்டி றோட்ஸ் 54 ஓட்டங்களைப் பெற்றார்.

இதுவரை விளையாடிய 5 போட்டிகளிலும் வெற்றி பெற்ற தென் ஆபிரிக்கா அணி 10 புள்ளிகளுடன் முதலிடத்தையும் 3 புள்ளிகளுடன் இந்தியா 2 ஆம் இடத்தையும் 1 புள் யுடன் ஆஸ்திரேலியா 3 ஆம் இடத்தையும் வகிக்கின்றன. (இ-10)

## பாடசாலை மாணவருக்கு பருவகாலச் சீட்டு

யாழ்ப்பாணம், ஒக். 30

பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி அவர்களுக்கான பருவகாலச் சீட்டு விற்பனை வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாணம் சாலையிலும்—

பருத்தித்துறைச் சாலையிலும்—நவம்பர் தொடக்கம் மீண்டும் ஆரம்பிக்கப்பட உள்ளது.

ஒவ்வொரு மாதமும் 26 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரை யாழ். பேருந்து நிலையத்தில் இந்த விற்பனை இடம் பெறும்.

பாடசாலை மாணவர்களுக்குச் சலுகை அடிப்படையில் பருவகாலச் சீட்டுக்கள் வழங்கப்படும்.

பருவகாலச் சீட்டுக்களைப் பெறவிரும்பும் மாணவர்கள் தங்களது பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தப்பட்ட சிபார்சுக் கடிதத்தைச் சமர்ப்பித்துச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அதிக மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளில் நேரடியாகப் பருவகாலச் சீட்டுக்கள் வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் பிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் வே. சோ. சொக்கலிங்கம் அறிவித்துள்ளார். (இ-117)

# உண்ணாவிரதத்தை கைவிட நிபந்தனை

### பயிலுநர் ஆசிரியர்கள் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 30

பயிலுநர் ஆசிரியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவது தொடர்பாக பத்திரிகைகளில் அறிக்கைகள் வெளிவந்துள்ள போதிலும், அது குறித்து எமக்கு இதுவரை அதிகாரபூர்வமாக எதுவும் அறிவிக்கப்படவில்லை. எழுத்து மூலமாக உறுதிதரப்படின் உண்ணாவிரதம் கைவிடப்படும்.

அகில இலங்கை பயிலுநர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் நேற்று மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதே சமயம் உண்ணாவிரதம் இருக்கும் பயிலுநர் ஆசிரியர்கள் ஐவரை ஆதரித்து இசுறுபாயாவுக்கான வீதியின் இரு மருங்கிலும் சுலோக அட்டைகளை ஏந்தியவாறு பெரும் எண்ணிக்கையான பயிலுனர் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

உண்ணாவிரதம் இருப்போரின் நிலை மோசமடைவதாகவும்—

இருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும்— சங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (இ-3)

கொழும்பு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாகரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர்.

அவர்களை வெலிக்கடைச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்க அப்பொழுது உத்தரவிடப்பட்டது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றத்தில் மீண்டும் எடுக்கப்பட்டது எனினும் வழக்கைத் தாக்கல் செய்த காங்கேசன் துறைப் பொலீஸார் நீதிமன்றத்துக்கு வராத காரணத்தால் வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

எனினும் சந்தேக நபர்களை மீண்டும் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்வது தொடர்பாகவுள்ள சிரமங்கள் காரணமாக யாழ் நீதிமன்ற நீதிவானின் எழுத்துமூலமான உத்தரவுக்கிணங்க கொழும்பு பிரதான நீதிவான் முன்னிலையில் இவர்கள் ஆஜர் செய்யப்பட்டனர் என்று தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்ரெம்பர் 30 ஆம் திகதி மானிப்பாயில் உள்ள தனது சிறிய தாயார் வீட்டுக்குச் சென்று வருவதாகக் கூறிச் சென்ற வேலாயுதபிள்ளை ரஜினி வீடு திரும்பாததும் —

தேடுதலின் பின்னர் கோண்டாவில் பகுதியில் உள்ள மலசலகூடக் குழி ஒன்றில் இருந்து அவர் உருக்குலைந்த சடலமாக மீட்கப்பட்டதும்— தெரிந்தவையே. (இ-3-10)

விழிப்புணர்வு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரதான நோக்கங்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

லண்டனில் இயங்கும் தமிழர் சம்மேளனம் இந்த விழிப்புணர்வு வாரத்தை ஏற்பாடு செய்துள்ளது.

வடக்கு - கிழக்கில் நடக்கும் போர் குறித்து வெளிநாடுகளில் பரப்பப்படும் பொய்யான தகவல்களை முறியடித்து சர்வதேச மக்களுக்கு உண்மை நிலையை எடுத்துச் சொல்லும் வகையில் விழிப்புணர்வு வாரத்தின் செயற்பாடுகள் அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-3-ரி)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 29ம்/1 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30-10-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org